ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

**Published on 14, April-2025** **ISSN: 3049-2688 (Online)**

# பத்துப்பாட்டில் காப்பியக் கூறுகள்

**க. பிரியா**
பகுதிநேர முனைவர் ஆய்வாளர், தமிழ்த்துறை,
கற்பகம் உயர் கல்விக்கழகம், கோவை – 21

**முனைவர் இரா. மதன்குமார்**
தமிழ்த்துறைத்தலைவர், நெறியாளர்
கற்பகம் உயர் கல்விக்கழகம், கோவை - 21

## ஆய்வுச் சுருக்கம்

*சங்க இலக்கியங்கள் இரும்பெரும் பகுதிகளாக பிரிக்கப்பட்டு அவை எட்டுத்தொகை பத்துப்பாட்டு என்னும் பனுவல்களாக நமக்கு கிடைக்கின்றன. அவ்வாறு கிடைக்கும் நூல்களில் பல்வேறு வகையான இலக்கண கூறுகளை நாம் காண முடிகின்றன. பத்துப்பாட்டு நூல்களில் காப்பிய அமைப்பிலான செய்திகள் பல இடங்களில் கையாண்டு உள்ளதனையும், காப்பியம் குறித்த செய்திகளையும் புலவர்கள் பதிவு செய்துள்ளதனை அறிய முடிகின்றது.. அவ்வாறு இடம் பெற்றுள்ள காப்பிய கூறுகளையும் காப்பிய இலக்கணத்தையும் புலவர்கள் எவ்வாறு கையாண்டுள்ளனர் என்பதை காண முடிகின்றது. தண்டியலங்காரம் கூறு இலக்கணத்தையும், அதன் வழியே பத்துப்பாட்டு நூல்களின் காப்பிய அமைப்பையும் விளக்குவதாக அமைகின்றது.*

**திறவுச் சொற்கள்:** *அகம், புறம், காப்பியம், பத்துப்பாட்டு, இலக்கணம்.*

## முன்னுரை

*தமிழ் இலக்கியம் பல வகைப்படும். தன்னுணர்ச்சிப் பாடல்களும், அகம், புறம் பற்றிய பாடல்களும் சங்க இலக்கியமாக மலர்ந்தன. அற நூல்கள் நீதி இலக்கியமாக வடிவம் கொண்டன. பிற்காலத்தில் பக்திப் பனுவல்கள், பக்தியின் அடிப்படையில் இலக்கியத் தன்மை பெற்றுப் பெருமை கொண்டன. நல்ல நீதிகளை உள்ளடக்கிக் கதைபொதி பாடல்களாக அமைந்தவை காப்பியம் என்னும் இலக்கிய வகையாக மலர்ந்தன. இலக்கியம் கண்டதன் பின், இலக்கணம் இயம்புதல் என்னும் கருத்துப்படி, இந்தக் காப்பிய இலக்கியங்கள் தோன்றிய பிறகு, அவற்றுக்கான இலக்கண விதிகளும் நூல்களில் இடம் பெற்றன.*

*தண்டியலங்காரம் என்னும் நூல், காப்பிய அமைப்பை, சிறப்பாகத் தமிழ்ப் பெருங்காப்பியங்களின் இலக்கணத்தை, வரையறுத்துக் கூறுகின்றது. அவ்வகையில் பத்துப்பாட்டு இலக்கிய நூல்களில் இடம்பெறும் காப்பியக் கூறுகளை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.*

## காப்பிய மரபு

*காப்பிய இலக்கணங்களாகச் சொல்லப்பட்டவற்றைப் பின்பற்றிய காப்பியக் கவிஞர்கள் பலரும், சில இயல்புகளை ஒரே மாதிரியாகத் திரும்பத் திரும்ப அமைத்தனர். அவை காப்பிய மரபுகள் ஆயின. எடுத்துக்காட்டாக மலை, கடல், நாடு, வளநகர், பருவம்*

என்னும் வருணனைகளைத் தனித்தனியே நாட்டுப் படலம், நகர்ப் படலம் எனப் பகுத்து விரிவாகப் பாடினர். இவை காப்பியக் கதைப் போக்கிற்குப் பெரிதும் துணை செய்யாத நிலையிலும் இம் மரபுகள் காப்பிய அமைப்பில் வேரூன்றி விட்டன. காப்பியத்தைத் தொடங்கும் போது வாழ்த்து, வணக்கம், வருபொருள் கூறுவதும் மரபாக உறுதிப்பட்டது.

காப்பியத்தின் முதல் சொல் பெருமைக் குரிய சொல்லாக அமைய வேண்டும் என்பது கூட மரபு ஆனது. எடுத்துக் காட்டாக, கம்பராமா யணம் உலகம் யாவையும் எனத் தொடங்குகிறது. பெரிய புராணம் உலகெலாம் உணர்ந்து எனத் தொடங்குகிறது. காப்பியத்தினுள் தலையாய அறக்கருத்துகளைப் பாவிக மாக (உட்பொதிவாக)-வைப்பது அல்லது வெளிப் படையாகச் சொல்வது மரபு ஆயிற்று. இயற்கையிறந்த நிகழ்வுகளும் (Supernatural), எதிர்வரும் நிகழ்வுகளை உணர்த்துவதான கனவு, நிமித்தம், வான்மொழி (அசரீரி) ஆகியவையும் காப்பியங்களில் இடம் பெறுவது மரபாயிற்று. காப்பியங்களில் கதை நிகழ்ச்சி, இடையில் தொடங்கப் பெறுவதும், பல கலைகள் குறிக்கப்படு வதும், இசைப்பாடல், கட்டுரை ஆகியவை இடம் பெறுதலும் மரபாகக் காணப் படுகின்றன.

## தமிழ்க் காப்பியக் கொள்கைகள்

தமிழ்க் காப்பியக் கொள்கைகள் பற்றித் தண்டியலங்காரம் முதன்முதலில் தொகுத்துக் கூறுகிறது. காப்பியங்கள் பெருங்காப்பியம், காப்பியம் என இரு வகைப்படும். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொரு ளையும் கூறுவது பெருங்காப்பியம் எனவும், அந்நான்கனுள் ஒன்றேனும், பலவேனும் குறைத்துக் கூறுவது காப்பியம் எனவும் தண்டியலங் காரம் கூறுகிறது.

தண்டியலங்காரம் வடமொழியில் தண்டி இயற்றிய காவ்யாதர்சம் என்னும் நூலைத் தமிழ்ப் படுத்தி அவரால் இயற்றப்பட்டது. காப்பிய இலக்கணத்தைத் தண்டியலங் காரம் விரிவாக எடுத்துரைக்கின்றது. காப்பியத்தைப் பெருங்காப்பியம், காப்பியம் என்று இரு வகைப்படுத்தி, அவற்றின் இலக்கணத்தைத் தனித்தனியே எடுத்துச் சொல்கிறது.

பெருங்காப் பியநிலை பேசுங் காலை
வாழ்த்து வணக்கம் வருபொருள்
இவற்றினொன்று
ஏற்புடைத் தாகி முன்வர வியன்று
நாற்பொருள் பயக்கும் நடைநெறித் தாகித்
தன்னிகர் இல்லாத் தலைவனை
யுடைத்தாய்
மலைகடல் நாடு, வளநகர் பருவம்

(தண்டி, நூற்பா-8)

என்னும் நூற்பாவில் காப்பிய இலக்கண மாவது என்பதனை விளக்குகின்றார் தண்டி ஆசிரியர்.

## பத்துப்பாட்டு

காப்பியத் தலைவர்கள் ஒரு நாட்டுப்புற சமூகத்தின் தலைவர்களாக இருந்துள்ளனர். அவ்வாறே பத்துப்பாட்டு நூல்களும் அமைந்துள்ளது. திருமுருகாற்றுப்படையில் மட்டுமே தலைவனாக கடவுளைப் படை த்துள்ளார் நக்கீரர். பெரும்பாண்மை மனிதர்களின் வீரச் செயல்களையும், அவர்களின் இன்னியமையாத சிறப்பினை யும் எடுத்தக் கூறுவதாக சங்க இலக்கியங்கள் அமைகின்றன.

## நுவல் பொருள்

பெருங்காப்பியக் கூறுகளில் தலையாய நுவல் பொருள்களான அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றை எடுத்தியம்பு வது காப்பிய மரபாகும். இவற்றில் குறையிருப்பின் சிறுகாப்பியத் தகுதியையே பெறும். இவற்றுள் அறம் என்பது இடத்திற்கு ஏற்பச் சூழலுக்கு ஏற்ப மாறும் தன்மையுடையது. அவற்றில் பசிப்பிணி என்பது மிகப்பெரிய கொடிய நோயாகும். அந்த நோயைக் களைவதே மிகச் சிறந்த அறமாகும். இதனை மணிமேகலை,

"மக்கள் தேவர் என இரு சார்க்கும்
ஒத்த முடிவின் ஓர் அறம் உறைக்கேன்
பசிப்பிணி தீர்த்தல் என்றே, அவரும்
தவப்பெரு நல்அறம் சாற்றினர்"

(மணிமேகலை 12-14)

எனக்குறிப்பிடுகின்றது. இதனைப் போலவே, மலைபடுக்கடாம் நூலில்

தொலையா நல்லிசை உலகமொடு நிற்பப்
பலர் புறங் கண்டவர் அருங்காலம் தாஇப்
புலவோர்க்குச் சுரக்கும் அவன் ஈகை
மாரியும்" (மலை 72)

என்னும் வரிகளில் பகைவர் திறையாகத் தந்த பொருளைப் புலவர்கட்கு வழங்கி உலகம் உள்ளவம் நல்ல புகழை நிலைநாட்டியவன் நன்னன் ஆவான். மற்ற அரசர்கள் எல்லாம் கூத்தர்களுக்கும் பாணர்களுக்கும் பரிசில் தந்து சிறப்பிக்கி ன்றார்கள். ஆனால் நன்னன் புலவர் களுக்கு மும்மாரிப் பொழியும் மேகம் போல பரிசு வழங்கிச் சிறப்பித்தான்.

"புரைத்தோல் வரைப்பின் சேவனிழல் புலவோர்க்குக்

கொடைக்கடன் இறுத்த அவன் தொல்லோர் வரவும்". *(மலை 73)*

தான் வென்ற நாட்டையும் ஊரையும் அறிவுடையோர்க்குக் கொடுக்கும் மறக்குடி மறவர்க்குத் தலைவன் நன்னன் ஆவான்.

எள் அறு சிறப்பின் வெள் அரை கொளீஇ
முடுவல் தந்த பைம் நிணம் தடியொடு
நெடு வெண்ணெல்லின் அரிசி முட்டாது
தலை நாள் அன்ன புகலொடு வழி சிறந்து
*(மலை 563-565)*

தம்பால் இழைபோன இடம் காண்பார் க்குத் தெளியவராத நுண்ணிய நூலால் இயன்ற ஆடைகளை நுமது வறிய அரையில் உடுத்தி நீர் நும் மனத்திற்கு இசைதலான் ஆண்டுப் பலநாள் வெண்ணெல்லின் அரிசியும் வழங்குவதைக் காணலாம்.

## தன்னிகரில்லாத காப்பியத் தலைவன்

தமிழ்க் காப்பிய மரபில் முக்கியக் கூறாக அமைவது தன்னிகரில்லாத காப்பியத் தலைவன் படைக்கப்படவேண்டும் என்ப தாகும் காப்பிய இலக்கணங்களைக் கூறும் தண்டியலங்காரம். மாறனலங்காரம், நவநீதப் பாட்டியல் முதலிய இலக்கண நூல்கள் காப்பியம் தன்னிகரில்லாத நன்மையனாய் இருத்தல் வேண்டும் என்று தலைவனின் இயல்பைச் சுட்டுகிறது. பட்டினப்பாலையில் தன்னிகரில்லாத தலைவனாகவும், எல்லா வகை மாந்தர் களினாலும் போற்றக் கூடிய தலைவனாக கரிகாலன் திகழ்வதையும், ஒவ்வொரு நொடியும் மற்றவர்களின் நலனுக்காகவே வாழவிரும்புவதையும்,

"கொடுவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்கும்

பிறர் பிணியகத் திருந்து பீடுகாழ் முற்றி

அருங்கரை கவியக் குத்திக் குழிகொன்று

பெருங்கை யானை பிடிபுக் காங்கு

நுண்ணிதின் உணர நாடி நண்ணார்

செறிவுடைத் திண்காப் பேறிவாள் கழித்து" *(பட்டினப்பாலை 221-227)*

எனும் பாடலடிகள் வழி கரிகாலனின் பண்பினை அறிய முடிகின்றது.

## அகவாழ்வு

"நன்மணம் புணர்தல், புனல் விளையாட்டு, சிறுவர் பெறுதல் ஆகியவை 'அகவாழ்வு" எனும் காப்பிய உறுப்பில் அடங்குகின்றன. குறிஞ்சிப்பாட்டில் சான்றாண்மை ஒழுக்கம், நல்லியல்பு, தலைவியின் அகவாழ்வினை போன்றவை விளப்பட்ள்ளன. இதனை,

முத்தினு மணியினும் பொன்னினு மத்துணை

நேர்வருங் குரைய கலங்கெடிற் புணருஞ்

சால்பும் வியப்பு மியல்புங் குன்றின்

மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்த

லாசறு காட்சி யையர்க்கு மந்நிலை

*(குறிஞ்சி 13-17)*

என்ற வரிகளில் தேடி ஈட்டினால் அவை மீண்டும் வந்து சேர்ந்துவிடும். சான்றா ண்மை ஒழுக்கம், பிறர் வியக்கத்தக்க பெருமை, நல்லியல்பு ஆகியவை, குன்றிப் போனால் அவற்றை மீண்டும் தூக்கிப் புகழ்நிலையில் நிறுத்துதல் யாராலும் முடியாத பண்புகள். குற்றமற்ற மெய்யறிவுடைய ஐயர்க்கும் அது எளிதன்று என்று தொன்னெறி உணர்ந்த அறிஞர்கள் கூறுவதனைக் காணலாம்.

## புறவாழ்வு

கலைஞர்கட்கு அருள் சுரந்து பரிசளிக்கும் கரிகாலனின் வண்மையைப் புலவர் சிறப்புறப் பாராட்டியுள்ளார். கண்ணால் பருகுவது போலப் பார்த்து, எலும்பையும் குளிரச் செய்யுமாறு அன்பு செலுத்தி, ஈரும் பேனும் தங்கியுள்ள கந்தலாடை யினை நீக்கி, கண்ணுக்குப் புலப்படாத நுண்ணிய இழைகளால் நெய்யப்பட்ட பட்டாடையை உடுத்தி, உயர்ந்த அரிசியால் சமைத்த புலால் உணவினை உண்ணச் செய்து, கன்றொடு கூடிய யானைகளைப் பரிசாக அளித்துப் பிரியா விடை தருவான் கரிகாலன் என்கின்றார் புலவர் பால்போல் வெண்மை யான நான்கு குதிரைகள் பூட்டிய தேரைக்

கொடுத்து, காலில் ஏழடிகள் பின் சென்று அவர்கட்கு விடையளித்தான் என்கின்றார் புலவர் பல திணைகளும் அடுத்தடுத்து இருந்தமையால் ஒவ்வொரு திணை மாந்தரும் தம் பொருள்களை அடுத்துள்ள நில மக்களோடு பண்ட மாற்றிக் கொண்டனர் என்பதனை விளக்கியவர்.

"குறிஞ்சி பரதவர் பாட, நெய்தல்

நறும்பூங் கண்ணி குறவர் கட

கானவர் மருதம் பாட, அகவர்

நீல்நிற முல்லைப் பகறிணை நுவல்

(பொருநர்218-221)

என்று அவர்களின் பண்பாட்டுப் பரி மாற்றத்தையும் விளக்கியுள்ளார். மேலும், புலவருக்கும் மன்னனுக்கும் இடையிலான உறவுக்கு பொருநராற்றுப்படை பாடலடி கள் சிறந்த சான்றாக அமைகின்றது.

'கேளிர் போல கேள் கொளல் வேண்டி

வேளாண் வாயில் வேடப் கூறின்

கண்ணில் கான நண்ணுவ

(பொருநராற்றுப்படை பா.அடி 74-77)

தன்னை நாடி வந்த புலவரைப் புதிதாக் கண்ணூற்றவராய் எண்ணாது தன்னுடன் நீண்ட நெடுங்காலமாக பழகிய நண்பரி டம் அன்பு காட்டுவது போல மன்னன் அன்பு காட்டினான் என்பதை பொருந ராற்றுப் படை பாடல் வழி அறிய முடிகிறது.

சங்க கால மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வை மேற்கொண்டனர் அவர்களைவிட ஆற்றல் மிக்க இயற்கைப் பொருட்களைத் தெய்வமாகவும் போற்றி வணங்கினர் மரம், மண், நீர், காற்று நெருப்பு என்று எல்லா வற்றையும் கடவுளாய் வழிபட்ட செய்தி யினையும் அறியமுடிகிறது. மேலும், காப்பியத்திற் கான அனைத்து இன்றியமையாத பாடு பொருட்களையும் உள்ளடக்கியதாக பத்துப் பாட்டில் காணமுடிகின்றது.

## தொகுப்புரை

காப்பிய இலக்கணங்களாகச் சொல்லப் பட்டவற்றைப் பின்பற்றிய காப்பிய ஆசிரியர் கள் பலரும் சில இயல்புகளை ஒரே மாதிரியாக அமைத்தனர். அவை காப்பிய மரபுகள் ஆயின மலை, கடல் நாடு வளநகர் பருவம் என்னும் வருணனைகளைத் தனித்தனியே நாட்டுப் படலம், நகர்ப்படலம் எனப் பகுத்து விரிவாகப் பாடினர். இவை காப்பியக் கதைப்போக்கிற்குப் பெரிதும் துணை செய்யாத நிலையிலும் இம் மரபுகள் காப்பிய அமைப்பில் வேரூன்றி விட்டன.

அவ்வகையில் பத்தப்பாட்டு நூல்களின் ஒவ்வொரு பாடல்களும் ஒவ்வொரு காவியமாக திகழ்வதனை அறியமுடிகிறது. காப்பிய இலக்கணத்திற்கு உட்பட்டதாக காணக்கூடிய அத்தனை தகுதிப்பாடுகளும் பத்துப்பாட்டு நூல்களின் வழியே ஊடாடு கின்றன. காப்பியத் தலைமையும் அதன் பின்னணியும், அதன் பாடுபொருளும் தண்டியலங்கார ஆசிரியரின் அடித் தொட்டே அமைந்துள்ளதனை நிறுவ முடிகின்றது.

## துணைநூற்பட்டியல்


1. இராகவையங்கார். ரா, திருமுருகாற்றுப் படை மூலம், கம்பர் விலாசம்,1923
2. சக்திதாசன், முல்லைப்பாட்டு மூலமும் விளக்கமும், அன்பு வெளியீடு, 59, பிராட்வே சென்னை - 1
3. சாமிநாதையர். உ.வே., பட்டினப்பாலை மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சாமி நாதையர் நூல் நிலையம், சென்னை - 90
4. சாமிநாதையர். உ. வே., பத்துப்பாட்டு மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சாமி நாதையர் நூல்நிலையம், சென்னை - 90
5. சாமிநாதையர்.உ.வே., பரிபாடல் மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை - 90
6. சாமிநாதையர்.உ.வே., குறுந்தொகை மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சாமி நாதையர் நூல் நிலையம், சென்னை - 90
7. சாமிநாதையர்.உ.வே. - புறநானூறு மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சாமி நாதையர் நூல் நிலையம், சென்னை - 90